பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 20 சனிக்கிழமை 08.10.2022 கதிர் 224

## சிறிதரன் எம்.பியின் 'பேஸ்புக்' முடக்கம்!

### சபையில் கொதித்தெழுந்தார் அவர்



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பான புகைப்படங்களையும் செய்திகளையும் பதிவேற்றம் செய்மைக்காக 20.09.2022 ☞2

# கடந்தகாலத் தலைவர்களே இந்த நிலைமைக்குக் காரணம்

### ஐ.நா.வின் புதிய தீர்மானத்தால் சர்வதேச உதவிகள் கைவிட்டுப் போகலாம் என்று நீதி அமைச்சர் சீற்றம்



ஐ.நா.வின் புதிய தீர்மானத்தால் இலங்கை பாரதூரமான நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது. நாடு என்ற ரீதியில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கொள்கை மாற்றம் மற்றும் தலைவர்கள் மீதான நம்பிக்கை சீர்குலைவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கான முக்கிய காரணமாகும்.

- இவ்வாறு நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐ.நா.வில் இலங்கைக்கு எதிராகப் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிவிவகார அமைச்சுடன் ☞2

## இரட்டை வேடம் போடும் எதிர்க்கட்சித் தலைவர்!

### சாடுகின்றார் அமைச்சர்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரட்டை வேடம் போடுகின்றார் என்று கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர குற்றஞ்சாட் டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ☞8

# பொலிஸ் பதிவுப் படிவங்களை நிரப்பிக் கொடுக்க வேண்டாம்!

### கொழும்பு மாநகர மக்களுக்கு மனோ அறிவுறுத்தல்



கொழும்பில் பொலிஸ் பதிவுப் படிவங்களை நிரப்பிக் கொடுக்கவேண்டாம் – என்று கொழும்பு மாநகர மக்களுக்கு ☞8

## பிரசாரம் இன்றி சாதிக்க முடியாது

### ஜனாதிபதி தெரிவிப்பு




தற்போதைய சவாலில் இருந்து நாட்டை மீட்டெடுக்க நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும் எனவும், அதற்குத் துல்லியமான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது அவசியம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரசாரம் இன்றி எதனையும் சாதிக்க முடியாது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் அரசின் வேலைத்திட்டத்தை தாமதமின்றி மக்களுக்குக் கொண்டு சேர்க்க அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் அனைத்து ஊடக செயலாளர்களிடமும் கோரிக்கை விடுத்தார். ☞8

## தேரேறி வந்து அருள் பாலித்த வடமராட்சி வல்லிபுர ஆழ்வார்

### பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்., வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்றுகாலைநடைபெற்றது.

வசந்த மண்டபப் பூஜைகள் நடைபெற்ற பின்னர் சக்கரத் தாழ்வார் தேரேறி வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ☞8

## இன, மத முறுகலை ஏற்படுத்த நாடகமாடுகின்றது கூட்டமைப்பு

### இப்படிக் குற்றம் சாட்டுகின்றார் விமல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், ஜெனிவா மாநாடு நடைபெறும் காலங்களில் ஏதாவது ஒரு நாடகத் தைக் காட்டி மக்கள் வாழ்க்கையைச் சீர்குலைக்கின்றனர் அல்லது இன, ☞8

## தமிழர் பிரச்சினைகள்: ஜனாதிபதியுடன் பேச்சு

### அமைச்சர் அமரவீர தகவல்

குருந்தூர்மலை பிரச்சினை உள்ளிட்ட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு கமத்தொழில் அமைச்சர் மற்றும் ☞2

## சுயாதீனம் இல்லையேல் உடன் பதவி விலகுவேன்

### 'கோபா' குழுவின் தலைவர் கபீர் ஹாசீம் அறிவிப்பு



சுயாதீனமாகச் செயற்பட முடியாமல் போனால் 'கோபா' குழுவின் தலைமைப்பதவியை துறப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் 'கோபா' குழுவின் ☞2

## ஜெனிவாவில் இலங்கைக்கு அவமானம்!

### ஹக்கீம் விளாசல்



ஜெனிவா தீர்மானம் தொடர்பில் கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாக இருந்த நாடுகளும் இம்முறை நடுநிலை வகித்திருக்கின்றமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டுக்கு ஏற்பட்ட தோல்வி மட்டுமல்ல அவமானத்துக்கும் உரியது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா ☞8

## 200 கிலோ ஹெரோயினுடன் ஈரானியர்கள் அறுவர் கைது!



(ந.லோகதயாளன்)

ஈரானில் இருந்து கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் 200 ☞8



## சுயாதீனம்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப்பதவியை எதிரணிக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், கோபா குழுவுக்கு நான் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டிருந்தேன்.

எனினும், கோப் குழுவின் தலைவர் நியமனம் தொடர்பில் எம்மால் திருப்தி கொள்ள முடியாது.

அப்பதவிக்கு எரான் விக்கிரமரத்னவை நியமிக்க எதிரணிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

கோப் குழுவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள ரஞ்சித் பண்டார திறமையானவர் என்ற போதிலும் கொள்கை ரீதியலான முரண்பாடு உள்ளது. அவரின் பெயரை மஹிந்தானந்த அளுத்கமகே முன்மொழிய அதனை ரோஹித அபேகுணவர்தன வழிமொழிந்தார்.

ஆளுங்கட்சி சார்பிலேயே இத்தேர்வு இடம்பெற்றுள்ளது. எனவே, இக்குழு ஊடாக அரச நிறுவனங்கள் தொடர்பில் எவ்வாறு விசாரணை நடத்துவது?

எனவே, 'கோபா' குழுவின் தலைவராகச் செயற்படுவது பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. சுயாதீனமாகச் செயற்படமுடியாவிட்டால்முடிவொன்றை எடுப்பேன் - என்றார்.

## கடந்தகாலத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து நாட்டில் ஜனநாயக சீர்திருத்தங்களை விரைவில் ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளைசர்வதேசசமூகத்துடன்இணைந்து மேற்கொள்ளவுள்ளோம்.

புதிய தீர்மானத்தால் நாடு பாரதூரமான நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தால் நாட்டுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையும் பாதிக்கப்படலாம்.

இலங்கை தன்னிறைவை அடைந்த நாடாக இருந்தால், இந்த விடயம் தொடர்பில் கரிசனை கொண்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. எனினும், இலங்கையிலிருந்து 70 வீதமான பொருள்கள் ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாக அமைந்துள்ளது.

நாட்டில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதாக சர்வதேச நாடுகளுக்கு எடுத்துரைத்தாலும்,நாட்டில்காணப்படும் சந்தர்ப்பவாத அரசியலால், சர்வதேச நாடுகளால் வழங்கப்படும் ஒத்துழைப்புகள்மேலும்தாமதமடையக்கூடும் - என்றார்.

## சிறிதரன்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஆம் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு இயங்க முடியாதவாறு தனது முகநூல் (பேஸ்புக்) முடக்கப்பட்டுள்ளதைச் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்படி விடயத்தைச்சபையின்கவனத்துக்குக்கொண்டு வந்த அவர் மேலும் கூறுகையில்,

எனது சொந்தப் பெயரில் இயங்கி வரும் எனது தனிப்பட்ட முகநூல் கணக்கில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பான புகைப்படங்களையும் செய்திகளையும் பதிவேற்றம் செய்மைக்காக 20.09.2022 ஆம் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு இயங்க முடியாதவாறு எனது முகநூல் முடக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் நிலைமாறு கால நீதி பொறிமுறையின் அடிப்படையில் வணக்க முறைகளுக்கு அனுமதி உண்டு.

எனவே, அதனை வழங்க வேண்டும் என்று சர்வதேச சமூகம் கேட்டதற்கு இணங்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முன்னாள் ஜனதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கும் இடையில் 07.11.2015ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போதும் இந்த விடயம் ஆராயப்பட்டு வணக்கத்துக்குத் தடையில்லை என்ற அனுமதி வழங்கப்பட்ட நிலையிலும் 03.08.2022 ஆம் திகதி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அவரது ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டு அதன்போதும் வணக்க நிகழ்வுகளுக்கு இந்த நாட்டில் தடையில்லை என்று அவரால் தெரிவிக்கப்பட்டு வணக்க நிகழ்வுகள் அனுமதியோடு இந்த நாட்டில் நடக்கும் நிலையிலும் அத்தகைய செய்திகள், படங்களைப் பகிர்ந்தமைக்காக என்னுடையதும், என் போன்ற பலரினதும் முகநூல் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளமை எமது கருத்துச் சுதந்திரத்தைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

முகநூலானது எமது மன உணர்வுகளை வெளிப்படுத்தும் பொது வெளி ஊடகமாகப் பார்க்கப்பட்ட நிலையில் இன்று அரச சார்பான ஊடகமொன்றாகவே பார்க்கும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, எனது முகநூல் முடக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கடந்த 22 ஆம் திகதி முகநூல் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடத்தலைவர் அபயரத்னவுக்கு என்னால் மின்னஞ்சல் மூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் இன்று வரையில் அது தொடர்பில் எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை - என்றார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பதிலளிக்கையில்,

முகநூலுக்கும் இலங்கை அரசுக்கும் தொடர்பு இல்லை. அது வெளிநாட்டு நிறுவனம். எனவே இது சர்வதேசத்தின் தடையே தவிர எமது தடை அல்ல - என்றார்.

## தமிழர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று குருந்தூர்மலை ஆதி சிவன் கோயில் ஆக்கிரமிப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. முன்வைத்த கூற்றுக்கள் தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் கூறுகையில்,

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த குருந்தூர்மலை பிரச்சினையை நான் குறைத்து மதிப்பிடவில்லை.

குருந்தூர்மலை பிரச்சினை உள்ளிட்ட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விடயத்தில் நான் தனிப்பட்ட ரீதியிலும் கவனம் செலுத்துவேன்.

எந்தவிதத்திலும் எவரும் இனவாதமாகச் செயற்படுவதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது.

நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சமமாக மதிக் கப்படுபவர். நாட்டின் அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அதுவே அவசியமாக உள்ளது - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜோக்கர் பீ(ரி)ஸ்!

**செய்பவனவற்றையெல்லாம் செய்து, நிலைமையைப் போட்டுடைத்துக் குழப்பி விட்டு, இப்போது ஒன்றும் தெரியாதவர் போல தத்துவம் பேசுகிறார் – நாட்டுக்கு மகா உபதேசம் செய்கின்றார் – பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.**

**இலங்கையின் பொறுப்புக் கூறல் விடயத்திலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வேலைத் திட்டத்திலும் நாம் இதுவரை காலம் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்துமே மீறப்பட்டுள்ள நிலையில், எதிர்காலம் குறித்து இலங்கை வழங்கும் வாக்குறுதிகளை எவரும் நம்பப் போவதில்லை என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருக்கிறார்.**

**இலங்கையை எவரும் நம்பார் என்ற ஞானம் இப்போதுதான் தமக்கு பிறந்துள்ளமை போல அவர் பேசுகிறார்.**

**சர்வதேசம் இலங்கையை நம்பப் போவதில்லை என்ற விவகாரம் இலங்கையின் கடந்த மூன்று மாத கால செயற்பாட்டினால் நேர்ந்து விட்ட நிலைமை என்ற மாதிரி மக்கள் காதில் பூச்சுற்றுப் பார்க்கின்றார் அவர்.**

**சர்வதேச சமூகத்தில் இலங்கையின் நம்பகத் தன்மையைப் பாதிக்கும் நடவடிக்கைகளை இலங்கை ஆட்சிப் பீடங்கள் மேற்கொள்வதற்கு 'எடுபிடி'யாக இருந்து காரியம் ஆற்றிய மிக முக்கிய புத்திஜீவிகளில் அவருக்குப் பிரதான இடம் உண்டு.**

**2003 ஆம் ஆண்டு இலங்கையின் இனப் பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி ரீதியிலான தீர்வு ஒன்றுக்கு இணங்குவதாக புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் மதியுரைஞர் பாலசிங்கத்துடன் சேர்ந்து, நோர்வே அனுசரணையாளர்களின் பிரசன்னத்தில், இலங்கை அரசின் சார்பில் ஒஸ்லோ அறிவிப்பை வெளியிட்ட பிரகிருதி இவர்தான்.**

**அதை அன்றே மறந்து, பின்னர் ராஜபக்ஷகளுக்காக அப்படி சர்வதேச பிரசன்னத்தில் இணங்கப்படவில்லை என்ற மாதிரி உலகமெங்கும் சென்று, விடயங்களைக் கட்டவிழ்த்து, பிரசார நடவடிக்கைகளைத் தொடர்ந்தவரும் அவரேதான்.**

**இலங்கையை சர்வதேசம் நம்பாது என்று அவர் கூறும் கருத்து நூற்றுக்கு இரு நூறு வீதம் சரியானதுதான். ஆனால் அந்தப் பொய் புரட்டுப் போக்கின் குறியீடாக உலகம் பார்க்கும் ராஜதந்திர அரசியல் தலைமைகளில் மிக முக்கியமானவர் இதே பீரிஸ் தான்.**

**அவர் இப்போது இலங்கையை உலகம் நம்பாது என்று முதலைக் கண்ணீர் வடித்துப் புரணி பாடுகின்றமை வேடிக்கையானது.**

**ஆளும் தரப்புகளிடமிருந்து பதவிகள், அதிகாரங்களைப் பெறுவதற்காக நாசத்தனமான வேலைகளை எல்லாம் சேர்ந்து செய்து, இலங்கையின் பெயரையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டு, இப்போது நல்ல பிள்ளை போல அவர் நாடகம் ஆடுவது வேடிக்கையிலும் வேடிக்கை.**

**மூன்று மாதங்களுக்கு முன்னர் அரசில் இருக்கும் வரை கொடூரப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு முதுகு கொடுத்து நியாயப்படுத்திய பீரிஸ், இப்போது அதைப் பார்த்து ஒலமிடுவது சிரிப்புக்கிடமானது.**

**மொத்தத்தில் கோமாளி அரசியல்வாதி – ஜோக்கர் – தாம் என்பதை இப்படி அடிக்கடி முரண்பாடான கருத்துச் சிதறல்கள் மூலம் அவர் தொடர்ந்து நிரூபித்து வருகிறார்.**

# விமர்சனங்களைத் தவிர்த்து மாற்றுவழிகளை முன்வைக்குக!

## அமைச்சர் கெஹலிய கோரிக்கை



அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பவர்கள் அதனை விடுத்து மாற்று வழிகளை முன்வைக்க வேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறு செயல்படாமையே நாடு நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்கு காரணமாகும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ஜனாதிபதியின் உரை தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

பொருளாதார நெருக்கடி காரணமாக நாங்கள் சற்று பின்னோக்கி இருக்கின்ற போதும் நாடு பெற்றுக் கொண்டுள்ள வெற்றிகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக சுகாதாரத் துறையில் போலியோ, மலேரியா, எச்ஐவி, ரூபெல்லா போன்ற நோய்கள் நாட்டில் இருந்தே இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று தாய் –சேய் மரணங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன.

நாட்டின் எதிர்காலம் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டிய காலம் இது. அதற்கான தீர்க்கமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். சிறந்த திட்டங்கள் இருந்தால் அதனை அரசாங்கத்திடம் முன்வைக்க முடியும். விமர்சனங்களை முன்வைப்பவர்கள் அதனை விடுத்து மாற்று வழிகளை முன்வைக்க வேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறு செயல்படாமையே நாடு நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்குக் காரணமாகியது .

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளோரிடம் தமது நிதியை நாட்டுக்கு அனுப்பவேண்டாம் என சிலர் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு அனைத்து நடவடிக்கைகளும் பின் தங்கும் போது அதை வைத்து அரசியல் செய்வதே அவர்களின் நோக்கமாக உள்ளது.

கடந்த கால அனைத்து தவறுகளுக்கும் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியது அவசியம். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண பொது வேலை திட்டத்தில் அனைவரும் இணைந்து செயற்படுவது முக்கியம். நாடு இயல்பு நிலையை அடைந்ததும் ஒவ்வொருவரும் தமக்கான அரசியலை மேற்கொள்ள முடியும்.

அதனால் கடந்த கால சம்பவங்களை ஒருபுறம் வைத்துவிட்டு நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண செயற்படுவதே அனைவரதும் பொறுப்பாகும். – என்றார்.

# இந்தியா, ஜப்பான் நடுநிலைமை வகித்தமை தொடர்பில் அரசு கவனம் செலுத்தவேண்டும்!

## மைத்திரி ஆலோசனை



இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட புதிய பிரேரணையில் இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட பெரும்பாலான நட்பு நாடுகள் நடுநிலைமை வகித்துள்ளமை தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் ஒருசில செயற்பாடுகளால் சர்வதேசம் இலங்கையைப் புறக்கணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது, ஆகவே, வெளிவிவகார கொள்கை நிச்சயம் மறுசீரமைக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதியின் சிறப்பு உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

2015 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் நாட்டின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேசம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது.

ஊழல் மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக பேசப்பட்டு இலங்கையை சர்வதேச நாடுகள் புறக்கணிக்கும் நிலை காணப்பட்டது.

2015 ஆம் ஆண்டு மக்களாணையுடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து சர்வதேசத்தின் ஒத்துழைப்பையும், நன்மதிப்பையும் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். நல்லாட்சி அரசாங்கம் சர்தேசத்தின் மத்தியில் நன்மதிப்பை பெற்றது.

கடந்த இரண்டரை வருட காலத்துக்குள் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பாக சர்வதேசம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. பொருளாதார பாதிப்புக்கான காரணத்தை சர்வதேசம் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பில் புதிய பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த பிரேரணைக்கு 20 நாடுகள் ஆதரவாகவும், 7 நாடுகள் எதிராகவும் வாக்களித்துள்ளதுள்ளமையுடன், 20 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட பெரும்பாலான நட்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துக் கொள்ளாமல் நடுநிலை வகித்துள்ளமை தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தீர்மானம் இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் மனித உரிமைகள் தொடர்பான நிலையை வெளிப்படுத்தியுள்ளது.

சர்வதேசத்தை பகைத்துக்கொண்டு தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து ஒருபோதும் மீண்டெழ முடியாது, ஆகவே வெளிவிவகார கொள்கை கட்டாயம் திருத்தம் செய்யப்பட வேண்டும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
சனிக்கிழமை 08.10.2022

# ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்துக்கு சர்வதேசரீதியில் வலுக்கும் ஆதரவு





## பிரபல நடிகைகள் பகிரங்கமாகக் குரல் எழுப்புகின்றனர்

வொஷிங்டன், ஒக்.08

ஈரானில் பெண்கள், தங்களது உரிமைகளுக்காகப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில், ஈரானிய பெண் களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக, இந்திய நடிகை பிரி யங்கா சோப்ராவும் களமிறங்கி யுள்ளார்.

முன்னதாக ஜூலியட் பினோச் மற்றும் இசபெல் ஹப்பர்ட் உள்ளிட்ட முன்னணி பிரெஞ்சு நடிகைகள் தங்களது முடியை வெட்டி ஈரானிய பெண் களுக்கு ஆதரவு தெரிவித்தி ருந்த நிலையில், பிரியங்கா சோப்ராவும் சமூக வலைதளங்களில் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கூறியி ருப்பதாவது:

ஹிஜாப் முறையாக அணியாததற்காக இளம் வயதிலேயே மஹ்சா அமினியின் வாழ்க்கை ஈரானிய பொலிஸாரால் மிகவும் கொடூரமாகப் பறிக்கப்பட்டது. ஈரானிலும் உலகெங்கிலும் உள்ள பெண்கள் மஹ்சா அமினிக்காக பகிரங்கமாக எழுந்து நின்று குரல் எழுப்பிவருகின்றனர். தங்கள் தலைமுடியை வெட்டு கிறார்கள். மற்றும் பல வடிவங்களில்எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். நீண்ட காலமாக கட்டாய மௌனத்திற் குப் பிறகு வெளிவரும் எதிர்ப்புக் குரல்கள் எரிமலையாக வெடித்துச் சிதறும்! இவை தடுக்கப்படக்கூடாது என்று பதிவிட்டுள்ளார்.

# இங்கிலாந்தில் மின்வெட்டு தினசரி மூன்று மணிநேரம்

## விநியோகம் தடைப்பட வாய்ப்பு



லண்டன், ஒக்.08

இங்கிலாந்தில் எரிவாயு பற்றாக்குறை நெருக்கடியான நிலையை எட்டும்பொழுது, நாட்டின் சில பகுதிகளில் மின்தடை ஏற்பட வாய்ப்புள்ளதாக அந்நாட்டு மின்சார கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

உக்ரைன் -ரஷியா இடையிலால போரின் காரணமாக இங்கிலாந்தில் எரிவாயு பிரச்சனை நெருக்கடியில் இருக்கிறது.

இந்நிலையில், வீடுகளில் அதிகம் மின்சாரத்தை இழுக்கக்கூடிய மின்சாதனங்களை மக்கள் காலை நேரங்களில் பயன்படுத்தாமல் இரவு நேரங்களில் பயன்படுத்தவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அதிகரித்துவரும் மின்கட்டணங்களை சமாளிப் பதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் மானியம் வழங்கப்படும் என்றும் அந்நாட்டு அறிவுறுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் கொரோனாவுக்கு முன்பு இருந்த பொருளாதார சூழலை எட்டிப்பிடிக்க 2024 ஆம் ஆண்டு வரை ஆகும் என பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ள நிலையில் இந்த மின்வெட்டு பிரச்சினை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இம்ரான் கான் எந்நேரத்திலும் கைதாகலாம்!

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைதாக உள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இம்ரான் ஆட்சிக்காலத்தில் அவரது தெஹ்ரீக் –இ–இன்சாப் கட்சிக்கு பல்வேறு நாடுகளிலிருந்து சட்டவிரோதமாக நிதி பெற்றதாக புகார் எழுந்தது.

இது தொடர்பாக பெடரல் ஏஜென்சி நடத்திய விசாரணையில் 10க்கும் மேற்பட்ட வங்கி கணக்குகள் துவங்கி வெளிநாட்டு நிதி பெற்றதாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து கட்சிக்கு சட்டவிரோதமாக வெளிநாட்டு நிதி பெற்ற வழக்கில் இம்ரான் கான் எந்நேரமும் கைது செய்யப்படலாம் எனவும், தற்போது அவர் வெளிநாடு தப்பி செல்லாமல் இருக்க வீட்டுக்காவ லில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து அவரது வீட்டு முன் ஆயிரகணக்கான ரசிகர்கள் மற்றும் கட்சி தொண்டர்கள் குவிந்து உள்ளனர்.

பாகிஸ்தான் தெஹ்ரீக் –இ–இன்சாப் தலைவர்கள் தாரிக் ரபி, ஹமீத் ஜமான் மற்றும் சைப் நியாசி ஆகியோர் ஏற்கனவே பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மிகப்பெரிய பேரணி நடத்த இம்ரான்கான் திட்டமிட்டு உள்ளார் எனக் கூறப்படுகிறது. கைபர் பக்துன்குவா அல்லது பஞ்சாப் அல்லது ராவத் டி–கிராஸில் தெற்கில் இருந்து பேரணியாக் தலைநகருக்குள் நுழைய முயன்றால், இஸ்லாமாபாத்திற்கு நுழைவதற்கு முன்பு இம்ரான்கானை கைது செய்ய அரசாங்கம் திட்டமிட்டு உள்ளதாகக் கூறப்படுகிறது.

# அமெரிக்காவுக்கு மிக நெருக்கடியான அணுஆயுத அச்சுறுத்தல் இப்பொழுது

## அதிபர் பைடன் நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை



வாஷிங்டன், ஒக்.08

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் 8 ம தநங்களாக நீடித்து வருகின்ற நிலையில் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தி ய நாடுகள் பக்கபலமாக இருந்து வருகின்றன. இதனை கடுமையாக எதிர்த்து வரும் ரஷ்ய அதி பர் புடின், போரில் மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து தலையிட்டால் அணு ஆயுத போரை நடத்தத் தயங்க மாட்டோம் என்று அண்மையில் எச்ச ரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் 1962க்கு பின்னர் அமெரிக்கா மிகப் பெரிய அணு ஆயுத அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். மான்ஹாட்டன் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய ஜோ பைடன், உக்ரைன் போரில் அணு ஆயுதங்கள் பயன்படுத்துவேன் என்று ரஷ்ய அதி பர் புடின் சொல்வதை வெறும் நகைச்சுவையாகக் கடந்துவிட முடியாது. 1962 இல் கியூபாவில் அணுசக்தி ஏவுகணைகளை நிறுத்தி சோவியத் யூனியன் அச்சுறுத்தியது. அதற்கு பிறகு தற்போது அமெரிக்கா மிகப்பெரிய அணு ஆயுத அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது என கூறினார்.

மேலும் அவர், உக்ரைனில் ரஷ்ய படைகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை என்பதால் ஆத்திரத்தில் புடின் அணு ஆயுதம் அல்லது உயிரி ஆயுதம் அல்லது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கும் – எனவும் எச்சரித்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

# சிரியாவில் அமெ. வான், தரைத் தாக்குதல்: ஐ.எஸ். தீவிரவாத மூத்த தலைவர்கள் சாவு!



டமாஸ்கஸ், ஒக்.08

சிரியாவின் பல்வேறு பகுதிகளில் ஐ. எஸ். தீவிரவாதிகளின் கை மீண்டும் ஓங்கி வருகின்ற நிலையில், அவர்களை ஒடுக்க அமெரிக்க படைகளின் உதவியுடன் சிரியா ராணுவம் போராடி வருகிறது.

இந்த நிலையில் –

சிரியாவின் வடகிழக்கு பகுதியில் துருக்கி நாட்டின் எல்லையோரம் அமைந்துள்ள காமிஷ்லி நகரில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நிலைகளை குறிவைத்து அமெரிக்க இராணுவம் ஒரே நேரத்தில் வான்வழியாகவும், தரை வழியாகவும் அதிரடி தாக்குதல்களை நடத்தி யது.

இதில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் மூத்ததலைவர்களான அபு முவுத் அல் கஹ்தானி, அபு அலா மற்றும் ரகான் வாஹித் அல் ம்மான் ஆகியோர் கொல்லப்பட்டனர். மேலும் இந்த தாக்குதல்களில் பயங்கரவாதிகளின் பதுங்கு குழிகள், ஆயுதகிடங்குகள் உள்ளிட்டவை நிர் மூலமாக்கப்பட்டன என அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# விபத்தில் பஸ் தீப்பற்றியது 11 பேர் பலி; 32 பேர் காயம்

## மாராட்டியத்தில் இன்று பயங்கரம்





நாசிக்,ஒக்.08

மராட்டியத்தில் பயணிகள் பஸ் விபத்தில் சிக்கி, தீப்பிடித்து எரிந்ததில் 11 பேர் உயிரிழந்தனர். 32 பேர் காயமடைந்து உள்ளனர். மராட்டியத்தில் நாசிக் நகரில் அவுரங்காபாத் சாலையில் பயணிகளை ஏற்றி கொண்டு சென்ற பஸ் ஒன்று இன்று அதிகாலை 5 மணியளவில் லொறி மீது மோதி விபத்திற்குள்ளானது. இதில், பலர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தில் பஸ் தீப்பிடித்து கொண் டது. தீ மளமளவென பஸ் முழுவதும் பற்றி எரிய தொடங்கியது. இதனால், பஸ்ஸுக்குள் சிக்கி கொண்ட பயணிகள் வெளியே வர முடியாமல் பரிதவித்தனர். இந்த விபத்தில் மற்றும் தீயில் சிக்கி 11 பயணிகள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஒரு குழந்தை மற்றும் 10 பெரியவர்கள் அடங்குவார்கள். 32 பேர் வரை காயமடைந்து உள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர்.

பஸ் தீ பிடித்து எரிந்தது பற்றிய தகவல் அறிந்ததும், தீயணைப்பு வீரர்களும் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்றுள்ளனர். தீயை அணைக்கும் பணி நடந்தது.

இந்த விபத்தில் பலி எண்ணிக்கை உயர கூடும் என அஞ்சப்படுகிறது.



# திருடும் சமயம் செல்போனை சார்ஜில் போட்டு விட்டு மறந்து சென்ற திருடன்!


நாமக்கல் அருகே திருட வந்த இடத்தில் செல்போனை சார்ஜ் போட்டு விட்டு மறந்து சென்ற நிலையில், திருடனின் செல்போனைக் கைப்பற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் சித்திரவேல் என்பவர் உணவகம் நடத்தி வருகிறார். வழக்கம் போல் இரவு ஹோட்டலை மூடி விட்டு சென்றுள்ளார்.

இந்நிலையில் இரவோடு இரவாக உள்ளே நுழைந்த மர்ம நபர் ஒருவர், இருட்டில் டார்ச் அடித்துக் கொண்டே தேடித் தேடி திருட்டு வேலையில் ஈடுபட்டுள்ளார். முதலில் உள்ளே இருந்த இருசக்கர வாகனத்தை திருட முயன்றுள்ளார். அதை நகர்த்த கூட முடியாததால், அந்த முடிவைக் கைவிட்டு விட்டு அப்படியே கல்லா பக்கம் ஒதுங்கியுள்ளார். அப்போது பார்த்து அவரது செல்போனில் சார்ஜ் தீர்ந்து போகவே, சரி திருடும் வரையில் சார்ஜ் ஏறட்டும் என்று கல்லா பெட்டிக்கு அருகிலேயே சார்ஜ் போட்டு விட்டு, கல்லாப் பெட்டியைத் திறந்து 20 ஆயிரம் ரூபாயை சுருட்டியுள்ளார். பணத்தைப் பார்த்த குஷியில் செல்போனை மறந்து விட்டு குஷியில் சுவரேறி குதித்து சென்ற அந்த அசட்டு ஆசாமியை அக்கம்பக்கத்தினர் பார்த்து விட்டனர். உடனடியாக சித்திரவேலுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், அவர் வருவதற்குள் திருடன் தப்பியிருந்தார்.

இதையடுத்து காவல்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் சி.சி.டி.வி. காட்சிகளை அடிப்படையாக வைத்து தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். அதிலும், திருடனைத் தேடும் பொலிஸுக்கு அல்வாவைத் தூக்கிக் கொடுத்தது போல், திருடனின் செல்போனே கிடைத்த நிலையில், விரைவில் குற்றவாளி பிடிபடுவார் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# நவீனத்துக்கு மாறி வரும் இந்தியா!



சென்னை,ஒக்.08

மாற்றம் ஒன்றே மாறாதது. ஆதியில் தொடங்கிய மனிதனின் நடைபயணம் இன்று பல்வேறு மாற்றங்களுக்கு பிறகு செவ்வாய் கிரகத்துக்கும், அதற்கு அப்பாலும் நீண்டு போய்க்கொண்டு இருக் கிறது. காற்று, மழை, காலநிலை, தட்பவெப்பம் என இயற்கையிலும் கூட அவ்வப்போது மாற்றம் என்பது நிகழ்ந்து வருகிறது. உலகத்தையே உள்ளங்கையில் கொண்டு வரும் கம்ப்யூட்டர், செல்போனின் பயன்பாடு போன்ற எவ்வளவோ மாற்றங்கள் மனித வாழ்வில் தினம்தினம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

இத்தகைய மாற்றங்கள் காரணமாக அம்மிக் கல், ஆட்டுக்கல், ரேடியோ, டிரான்சிஸ்டர், டெலிபோன் போன்று தேடி கண்டுபிடிக்க வேண்டிய பொருள்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இருந்தபோதிலும்

இத்தகைய பொருள்களில் சைக்கிள் மட்டும் நீண்டகாலமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்தியாவில் பெரும்பாலானோரின் வீடுகளில் சைக்கிள் பயன்பாடு இருந்து வருவதையும், பலர் குறுகிய தூர பயணத்துக்கும், சிலர் வெகுதூர பயணத்துக்கும் பயன்படுத்தி வருவதையும் இந்திய மத்திய சுகாதார அமைச்சகத்தின் தேசிய குடும்ப சுகாதார ஆய்வறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. இந்திய நிலைமை தொடர்பாக இந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய தகவல்கள் வருமாறு:-

தேசிய குடும்ப சுகாதார ஆய்வு நிறுவனம் நடத்திய கணக்கெடுப்பின்படி மோட்டார் சைக்கிள், மொபட் போன்றவற்றின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் நகர்ப்புறங்களில் 43 சதவீதம் பேரும், கிராமப்புறங்களில் 54 சதவீதம் பேரும் சைக்கிளை தங்களது பயணத்துக்காக பயன்படுத்தி வருவது தெரியவந்துள்ளது. மோட்டார் சைக்கிள், மொபட்டை நகர்ப்புறங்களில் 54.2 சதவீதம் பேரும், கிராமப்புறங்களில் 44.3 சதவீதம் பேரும் பயன்படுத்துகின்றனர். அதேவேளையில் கார் பயன்பாடு நகர்ப்பகுதியில் 13.8 சதவீதமும், கிராமப்பகுதியில் 4.4 சதவீதமும் உள்ளது.

மிக துல்லியமாக தெரியும் வகையில் அதிநவீன வசதிகளுடன் கூடிய கலர் டி.வி.கள் பலரது வீடுகளை அலங்கரித்து வருகின்றன. அதாவது, நகர்ப்பகுதியில் 86.8 சதவீத வீடுகளிலும், கிராமப்பகுதியில் 58.4 சதவீத வீடுகளிலும் கலர் டி.வி.கள் உள்ளன. அதேவேளையில் 2.3 சதவீதம் பேர் தற்போது வரை கறுப்பு-வெள்ளை டி.வி.களையே பயன்படுத்தி வருகின்றனர்.

ரேடியோ, டிரான்சிஸ்டர் என்றால் என்ன? என வருங்கால சந்ததியினர் கேள்வி எழுப்பும் வகையில் அதன் பயன்பாடும் வெகுவாக குறைந்துவிட்டது. நகர்ப்பகுதியில் 6.7 சதவீதத்தினரும், கிராமப்பகுதியில் 4.1 சதவீதத்தினரும் ரேடியோ, டிரான்சிஸ்டர் பயன்படுத்தி வருகின்றனர். செல்போன் பயன்பாடு மட்டும் நகர்ப்புறம், கிராமப்புறம் என்ற பாகுபாடு இல்லாமல் நகர் மற்றும் கிராமப்பகுதிகளை வெகுவாக ஆக்கிரமித்துள்ளது. அதாவது நகர்ப்பகுதியில் 96.7 சதவீதம் பேரும், கிராமப்பகுதியில் 91.5 சதவீதம் பேரும் செல்போன் பயன்படுத்தி வருகின்றனர். ஒட்டுமொத்தமாக 94.1 சதவீதத்தினர் செல்போன் பயன்படுத்துகின்றனர். இணையதள வசதி இல்லாத செல்போன், எதற்கும் உதவாது என்ற மனப்பாங்கு மக்கள் மனதில் வேரூன்றி இருப்பதால் இணையதள பயன்பாடும் அதிகரித்து உள்ளது. அதாவது நகர்ப்புறத்தில் 64.6 சதவீதத்தினரும், கிராமப்புறத்தில் 41 சதவீதத்தினரும் இணையதள வசதியை பயன்படுத்தி வருகின்றனர்.

'லாண்ட் லைன்' எனப்படும் டெலிபோன் பயன்பாடும் வெகுவாகக் குறைந்துவிட்டது. டெலிபோன் பயன்பாடு நகர்ப்பகுதியில் 4.6 சதவீதமாகவும், கிராமப்பகுதியில் 1.1 சதவீதமாகவும் உள்ளது.

அரசு மற்றும் தனியார் நிறுவன பணியில் இருப்பவர்கள், தொழில் செய்பவர்கள் என குறிப்பிட்ட பிரிவினரிடம் மட்டுமே வங்கி கணக்கு இருந்து வந்த நிலையில் மகளிர் சுயஉதவி குழுவினருக்கு கடன், தெருவோர சிறு வியாபாரிகளுக்கு கடன் என்பது போன்ற அரசின் திட்டங்களும், சிறுசேமிப்பு குறித்த விழிப்புணர்வும் பெரும்பாலானவர்களை வங்கி கணக்கு தொடங்க செய்தது. தேசிய குடும்ப சுகாதார ஆய்வு நிறுவனம் நடத்திய கணக்கெடுப்பின்படி நகர்ப்பகுதியில் 95.3 சதவீதம் பேரும், கிராமப்பகுதியில் 95.9 சதவீதம் பேரும் வங்கி கணக்கு வைத்துள்ளனர். வறுமை என்பது குறிப்பிட்ட சதவீதம் இந்தியாவில் இருந்து வருகின்ற போதிலும் இது செல்போன் வாங்குவதிலும், பயன்படுத்துவதிலும் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. - இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# பௌத்த நல்லெண்ண குழு காத்தான்குடிக்கு விஜயம்

(கே.எ.ஹமீட்)

இனங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்க்கும் நோக்கில் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று காத்தான்குடிக்கு வருகை தந்த பௌத்த சகோதர சகோதரிகளுக்கு காத்தான்குடி அல் அக்ஸா பள்ளிவாயல் நிர்வாகத்தினரால் இஸ்லாம் சம்பந்தமான தெளிவுகள் வழங்கப்பட்டன.

இதன்போது பள்ளிவாயல் பேஸ் இமாம் அல் ஹாபிழ் மவ்லவி இல்ஹாம் பலாஹியினால் தமிழிலும் மற்றும் பள்ளிவாயல் தலைவர் அல்ஹாஜ் பரீட்டினால் சிங்கள மொழியிலும் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேற்படி பௌத்த சகோதர, சகோதரிகள் தமிழ் மொழியை விசேடமாக கற்றுக் கொண்டிருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலத்திரனியல் நூலகம் புல்மோட்டையில் திறப்பு







குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் முதலாவது இலத்திரனியல் நூலகமாக புல்மோட்டை பொது நூலகம் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்கினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வு குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர் திருமதி மாலினி அசோக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இதில் குச்சவெளி பிரதேச சபையின் சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குச்சவெளி பிரதேச சபைக்கான இணைய தளம் www.kuchchavelips.lk தவிசாளரினால் மக்கள் பயன்பாட்டிற்காக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தந்த கே.ரமேஷுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

இலத்திரனியல் நூலகம் பற்றி சிறப்பான கண்ணோட்டத்தையும் இந்நூலகத்தின் நன்மைகளை பற்றியும் கிழக்கு பல்கலைக்கழக (நூலக) வளவாளர் என்.எம்.ரவிக்குமார் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் இன்றைய நிகழ்வின் முக்கியமாக புல்மோட்டை மத்திய கல்லூரி (தேசிய பாட சாலை), அறபாத்நகர் பாடசாலை, ஜின்னாபுர பாடசாலை மாணவர்களுக்கு புல்மோட்டை இலத்திரனியல் நூலக அங்கத்துவ அட்டைகள் தவிசாளரின் சொந்த நிதியில் இருந்து தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், அதிதிகள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேச சபையின் உப தவிசாளர் ஜனாப் எஸ்.எம்.சாஜித், குச்சவெளி பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப் பீ.எம்.நாஸீம் மற்றும் சனசமூக அபிவிருத்திஉத்தியோகத்தர்திருஎஸ்.முரளிதரன் ஆகியோர் உரையாற்றினர்.

புல்மோட்டை தையல் பயிற்சி நெறியினை நிறைவுசெய்த மாணவிகளுக்கான சான்றிதழ்கள் தவிசாளர் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள், அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

# அறுபது வயது மனைவியை அடித்துக் கொன்ற கணவன்

## ஆரையம்பதியில் சம்பவம்

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு - காத்தான்குடி, ஆரையம்பதியில் 60 வயதுடைய வயோதிபர் ஒருவர் தனது மனைவியை அடித்துக் கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய சம்பவம் நேற்று இரவு 8 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரையம்பதி மாவிலந்துறயைச் சேர்ந்த 60 வயதுடைய7பிள்ளைகளின் தாயாரான நவரெத்தினம் சோதிமலர் என்பவரே இதில் உயிரிழந்துள்ளார்.

பிள்ளைகள் அனைவரும் திருமணம் முடித்து வேறு பிரதேசத்தில் வாழ்ந்து வருவதால், கணவனும் மனைவியும் தனிமையில் வாழ்ந்து வருகின்றனர். இருவருக்கும் இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டுவதுடன் கணவன் மனைவியைவிட்டு வீட்டைவிட்டு வெளியேறி கடந்த ஒரு மாதகாலமாக கல்லாறு பிரதேசத்தில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவதினமான நேற்று அவரைத் தேடி மனைவி சென்று சமாதானம் பேசி அழைத்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று இரவு 8 மணியளவில் மனைவியை அடித்து கொலை செய்துவிட்டு கணவன் தப்பி ஓடியுள்ளளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நீதிமன்ற அனுமதியை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடிபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு மாநகரசபை நடத்தும் பௌர்ணமி கலை இலக்கிய விழா

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாநகரசபை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடத்தும் 'பௌர்ணமி கலை, இலக்கிய விழா' நாளை ஞாயிறு மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தில் மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரும், கலை-கலாசார குழுத் தலைவருமான மா. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் மாநகரசபை ஆணையாளர் நா.மதிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்க, அதிதிகளாக மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதி ஆணையாளர் உ.சிவராசா மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது தமிழர் கலைகளைப் பிரதிபலிக்கும் சிலம்பாட்டம், நடனம், நாடகம் போன்ற நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

# புலரும் புதுவிடியல்' கவிதை நூல் வெளியீடு திருமலையில் நாளை

(ஹஸ்பர்)

சம்பூர் சமரனின் 'புலரும் புதுவிடியல்' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் திருகோணமலை கேட்போர் கூடத்தில் இலக்கிய செயற்பாட்டாளர் கனக. தீபகாந்தன் தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வின் முதன்மை அதிதியாக ஈச்சிலம்பற்று கோட்டக்கல்விப்பணிப்பாளர் கவிஞர் ப . மதிபாலசிங்கம் அவர்களும், சிறப்பு அதிதிகளாக வைத்திய அதிகாரி திருமதி. ஜமுனா சிவசங்கரன், ஓய்வு நிலை அதிபரும் கவிஞருமான க.யோகானந்தன் அவர்களும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நூலின் முதற் பிரதி வைத்திய அதிகாரி வி.காந்தீபன் அவர்களுக்கு வழங்கப்படும் .

நிகழ்வில் வரவேற்புரையை தி. லலிதகோபனும், நூல் அறிமுகத்தை அ .விமலாந்தனும், நூல் மதிப்புரையை கவிதாயினி ஆசிரியர் சௌ. சந்திரகலாவும், 'இன்றைய நவீன இலக்கியத்தின் நகர்வு' பற்றிய உரையை திருமதி. எஸ்தரும் வழங்க, நன்றியுரையை அன்பின் பாதை றொசில்டா வழங்குவார்.

நிகழ்ச்சி தொகுப்பை செல்வி. அபிநயா ரகுராம் நிகழ்த்துவார். இந்த நூல் வெளியீட்டு விழா அன்பின் பாதை சமூகத்தின், எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவாவில் எமக்கு ஏற்பட்ட தோல்வி அவமானத்துக்குரியது!



## ரவூப் ஹக்கீம் ஆக்ரோஷம்

ஜெனிவா மனித உரிமை பேரவையில் எமது நாட்டுக்கு ஏற்பட்ட தோல்வி அவமானத்துக் குரியதாகும்.

கடந்த காலங்களில் எமக்கு ஆதரவாக இருந்தநாடுகளும்நடுநிலைவகித்திருக்கின்றன.

அத்துடன் அரசாங்கம் கொண்டுவர இருக்கும் புனர்வாழ்வு சட்டமூலத்தை மீளாய்வு செய்யவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ஜனாதிபதியின் உரை தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்தி வைப்புவேளைபிரேரணையில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

ஜெனிவா மனித உரிமை பேரவையில் எமது நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இலங்கைக்கு ஏற்பட்டது அவமான தோல்வியாகும்.

இதற்கு முன்னர் எமக்கு எதிராக பிரேரணை வந்தபோது 11 நாடுகள் எமக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.

ஆனால் இம்முறை அது 7 ஆகக் குறைவடைந்துள்ளது. அதேபோன்று வாக்களிப்பில் கடந்த முறை 24 நாடுகள் நடுநிலையாக இருந்தபோதும் இம்முறை 20 நாடாக குறைந்துள்ளது.

அதேபோன்று இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் மூலம் எமக்கு சாதகமான பதில் கிடைக்கும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவ்வாறான எந்த சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. சீனா எமக்கு ஆதரவளிக்கும் என்பது நாங்கள் அறிந்த விடயம்.

மேலும் ஜெனிவாவில் எமக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையில் பொருளாதார மோசடி குற்றச்சாட்டு, இது முதல் தடவையாக கொண்டுவரப்பட்டதாகும்.

எமது நடவடிக்கை காரணமாகவே நாங்கள் தேவையில்லாத பிரச்சினையில் சிக்கி இருக்கின்றோம்.

புனர்வாழ்வு சட்ட மூலம் பயங்கரவாத தடைச்சட்டம், இனவாத செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகும்.

புனர்வாழ்வு சட்டமூலம் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியன உயர் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் இந்த விடயங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வளிப்பதற்காக புனர்வாழ்வு சட்டம் மூலம் கொண்டுவர இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

ஆனால் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுபவர்களை அடக்குவதற்கு கொண்டுவந்த சட்டமாகவே அதைக் காண்கின்றோம்.

2009 யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் சிறிய போராளிகள், சாதாரண மக்கள் என 12ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டனர்.

ஆனால் அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். இறுதி நேரத்தில் இராணுவத்தில் சரணடைந்தவர்கள். என்றாலும் அன்று வெற்றி மகிழ்ச்சி காரணமாக யாரும் அதனை சவாலுக்குட்படுத்தவில்லை.

அத்துடன் அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் இந்த சட்டமூலம் உலக நாடுகள் ஏற்றுக்கொண்ட விடயங்கள் அல்ல. அதனால் அரசாங்கம் இது தொடர்பாக ஆராய்ந்து, புனர்வாழ்வு சட்ட மூலத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும். – என்றார்.







# புஸ்ஸலாவை, இந்து தேசிய கல்லூரியின் நவராத்திரிவிழா

புஸ்ஸலாவை, இந்து தேசியக் கல்லூரியின் நவராத்திரி கலைவிழா, கல்லூரி அதிபர் எஸ். சந்திரமோகன் தலைமையில், கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜரட்னமும், சிறப்பு அதிதியாக கம்பளை கல்வி வலயத்தின் தமிழ்க் கல்வி பிரிவு பணிப்பாளர் ஏ.எஸ். எழில்பிரியாவும் கலந்து சிறப்பித்தனர். பழைய மாணவர் சங்க செயலாளர் எம். கவாஸ்கரும் பங்கேற்றிருந்தார்.

நவராத்திரி விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்வுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# குருந்தூர் மலை பிரச்சினை உட்பட தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமருடன் கலந்துரையாடி வருகிறோம்!

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு

குருந்தூர் மலை பிரச்சினை உட்பட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி வருகின்றோம் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்ற நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ஜனாதிபதியின் உரை தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி முன்வைத்த கூற்றுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

குருந்தூர் மலை பிரச்சினையை நாம் குறைத்து மதிப்பிடவில்லை. தனிப்பட்ட விதத்திலும் அது தொடர்பில் கவனம் செலுத்தி வரு கின்றோம்.

எந்த விதத்திலும் எவரும் இனவாதமாக செயற்படுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.

நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படுவர். நாட்டின் அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அதுவே அவசியமாக உள்ளது.

அத்துடன் ஜனாதிபதியின் உரை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார். பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டால் நெருக்கடி நிலையை எதிர்கொள்ள முடியாது என்பதைத் தெரிந்து கொண்டே அன்று அவர் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதைத் தவிர்த்தார். இப்போது எந்த விதத்திலும் ஒரு போதும் அவ்வாறான பொறுப்பை இந்த அரசாங்கத்தில் தான் எடுக்கப் போவதில்லை எனத் தெரிவித்து வருகின்றார். இதன் மூலம் அவரத இரட்டை வேடம் புலப்படுகிறது.

இப்போது நிபந்தனைகளை முன் வைக்கும் அவ பொறுப்புக்களைப் பாரமெடுத்து அதன் பின்ன அத்தகைய நிபந்தனைகளை முன் வைத்திருக்கலாம் ஆனால் அதனை செய்யவில்லை. எனவே பொறுப்புக் களை ஏற்றுக்கொள்ள யாரும் முன்வராத நிலையில் ஜனாதிபதி அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தற் போது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை களை எடுத்து வருகின்றார். அதற்காக தற்போத பிரச்சினை இல்லை எனத் தெரிவிக்கவில்லை.

அதனால்நாங்கள் அனைவரும் ஒருவருக்கொருவ குற்றச்சாட்டுக்களை தெரிவித்துக்கொள்வதை விட்டு நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும். – என்றார்.

# அறநெறிப் பாடசாலை வாணிவிழா கல்லடி விபுலானந்த மண்டபத்தில்

## மட்டு. அரசஅதிபரும் கலந்து கொண்டார்







(வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷனின் அறநெறிப் பாடசாலை வாணிவிழா கல்லடி சுவாமி விபுலானந்த மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கருணாகரன் கலந்து கொண்டார். இராமகிருஷ்ண மிஷன் கல்லடி குருகுல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் தலைமையில் விழா நடைபெற்றது.

அதிபரும் சிவானந்தா பழைய மாணவருமான க.கரு ணாகரன் கலந்து சிறப்பித்தார். இலங்கையில் இராம கிருஷ்ண மிஷன் எனும் காணொளிக்காட்சி இடம்பெற்றது. அறநெறிப் பாடசாலை அதிபர் க.மதிவண்ணன் நன்றி

## பிரசாரம் இன்றி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தொடர்பாடல் பொறிமுறை தொடர்பில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் ஆகியோரின் ஊடக செயலாளர்களைத் தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி முன்னறிவிப்பு இன்றி, திடீரென இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும்.

அரசின் அபிவிருத்தி மற்றும் கொள்கைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வது அமைச்சின் ஊடகச் செயலாளர்களுக்கு இருக்கும் பிரதான பொறுப்பாகும். எனவே, அரசதகவல் தொடர்புப் பொறிமுறையை வலுவாகப் பேணுவதற்கு அரச தகவல் திணைக்களம், ஜனாதிபதி ஊடகப் பிரிவு மற்றும் அமைச்சுக்களுக்கு இடையில் சிறந்த ஒருங்கிணைப்பு பேணப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இந்தச் செயலமர்வில் ஊடகச் செயலாளர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நாம் வெளியிடும் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அரசு முன்னெடுக்கும் பணிகளை நாட்டுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

நாங்கள் மிகவும் கடினமான காலப்பகுதியில் இருக்கிறோம். 20ஆம் நூற்றாண்டிலோ அதற்கு முன்னரோ இப்படியொரு நிலைமையை நாடு எதிர்கொண்டதில்லை. இதிலிருந்து நாம் வெளியேற வேண்டும்.

பெரும்பாலான மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அந்த நிலைமையை நாம் சீர்செய்ய வேண்டும். அரசின் வேலைத்திட்டம் என்ன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

நாட்டில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் நாம் அவதானமாக இருக்கின்றோம். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாவிட்டாலும், அவற்றைப் பற்றி நாங்கள் அறிந்து வைத்திருக்கின்றோம். இது தொடர்பில் மக்களுக்குத் தகவல் வழங்க வேண்டும். அரசு என்ன செய்கின்றது என்பதை அனைவரும் அறிய வேண்டும். தவறுகள் இருப்பின் திருத்திக் கொள்ள வேண்டும். இந்த இக்கட்டான காலத்திலிருந்து நாம் மீள வேண்டும். நாட்டில் ஸ்திரமற்றத்தன்மை காணப்பட்டால், மீள முடியாது. நாட்டில் ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும். அந்த ஸ்திரத்தன்மையை உருவாக்க சரியான தகவல்களை வழங்குவது அவசியம்.

இலத்திரனியல் ஊடகங்களினாலோ அச்சு ஊடகங்களினாலோ அன்றி சமூக ஊடகங்களினால்தான் இன்று பிரச்சினை உருவாகியுள்ளது. அவற்றில் நல்லது கெட்டது இரண்டும் உண்டு. இது முழு உலகத்திலும் எதிர்கொள்ளப்படும் பிரச்சினையாகும்.

குறிப்பாக தற்போதைய நிலையில் இவற்றினால் எமக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே நீங்கள் அனைவரும் உங்களின் பொறுப்பைச் சரியாக நிறைவேற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்றாவிட்டால் முழு நாடும் மேலும் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.

இந்தச் செயலமர்வுக்கு அனைத்து ஊடகச் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டாலும் 83 வீதமானவர்கள் மாத்திரமே வருகை தந்துள்ளனர். யார் வரவில்லை என்பதைக் கண்டறிய வேண்டும்.

ஏனென்றால் இவர்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. ஊடகங்களுக்கு எப்படி தகவல்களை விளக்குவது, தவறான கருத்துக்களை எவ்வாறு சரி செய்வது என்பது தொடர்பில் பரந்தளவில் பிரசாரம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. பிரசாரம் இல்லாமல் எதுவும் வெற்றியடையாது.

நாட்டின் 75ஆவது சுதந்திரத்திர தின விழா அடுத்த ஆண்டு கொண்டாடப்படவுள்ளது. முன்னாள் சபாநாயகரின் யோசனையின்படி, அடுத்த வாரம் முதல் மக்கள்சபைகள் உருவாக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு பாரிய செயற்றிட்டங்கள் இருக்கின்றன. அவை தொடர்பில் பரந்தளவிலான பிரசாரங்களை முன்னெடுக்கவே இதுபோன்ற செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இவ்வாறான செயலமர்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டும் - என்றார்.

அரச தகவல் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்னவின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஊடக ஆலோசகர் பேராசிரியர் சுனந்த மத்தும பண்டார, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி சுதர்சன குணவர்தன, லங்காதீப பிரதம ஆசிரியர் சிரி ரணசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இரட்டை வேடம் போடும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் உரை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார்.

பொறுப்புக்களை பொறுப்பெடுத்தல் நெருக்கடி நிலையை எதிர்கொள்ள முடியாது என்பதைத் தெரிந்து கொண்டே அன்று பொறுப்பைத் தவிர்த்த அவர், இப்போது எந்தவிதத்திலும் ஒருபோதும் அவ்வாறான பொறுப்பை இந்த அரசால் தான் எடுக்கப்போவதில்லை எனத் தெரிவித்து வருகின்றார்.

இதன் மூலம் அவரது இரட்டை வேடம் புலப்படுகின்றது. இப்போது நிபந்தனைகளை முன்வைக்கும் அவர் பொறுப்புக்களைப் பாரமெடுத்து அதன் பின்னர் அத்தகைய நிபந்தனைகளை முன்வைத்திருக்கலாம் - என்றார்.

## இன, மத.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத முறுகல்களை ஏற்படுத்துகின்றனர்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் முன்வைத்த கருத்தைத் தொடர்ந்து, அது பற்றி கருத்துக் கூறுகையிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது விமல் வீரவன்ச மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விகாரை என்பது இந்த நாட்டின் வரலாற்று விகாரையாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏதேனும் பௌத்த வழிபாட்டிடம் இருந்தால் அதற்குப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். அதற்கு வெளியே வேண்டியளவு இந்து அல்லது வேறு மதங்களைச் சேர்ந்த வழிபாட்டிடங்கள் உள்ளன. அவற்றுக்கு எவரும் இடையூறுகளை ஏற்படுத்துவதில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெறும் காலங்களில், ஏதாவது ஒரு நாடகத்தைக் காட்டி மக்கள் வாழ்க்கையைச் சீர்குலைக்கின்றனர் அல்லது இன, மத முறுகல்களை ஏற்படுத்துகின்றனர்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களே செய்கின்றனர். இவர்களே தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளைத் தாக்க முற்பட்டனர்.

அவ்வாறு செய்துவிட்டு இந்த நாட்டின் வரலாற்றுப் புராதன குருந்தூர்மலை விகாரையில் பௌத்தர்கள் சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர். இது மிகவும் தவறாகும்.

இங்குள்ள எந்தவொரு இந்து ஆலயம் தொடர்பில் யாராவது எதனையாவது கூறுகின்றனரா? யாராவது பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனரா? - என்றார்.

## தேரேறி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்த் திருவிழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். நாளை மாலை சமுத்திரத் தீர்த்தமும், நாளைமறுதினம் காலை கேணித் தீர்த்தமும் நடைபெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் பெருந் திருவிழா நிறைவுறும்.

## பொலிஸ்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி உட்பட கொழும்பு மாநகர மற்றும் மாவட்ட பொலிஸ் நிலையங்களால், வீடு வீடாகக் கொண்டுவரப்படுவதாகக் கூறப்படும் பொலிஸ் பதிவு படிவங்களை நிரப்பிக் கொடுக்க வேண்டாம்.

இது பற்றி சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன ஆகியோருக்கு அறிவித்துள்ளேன். அவர்களும் இதை ஏற்றுக்கொண்டு உடன் நிறுத்துவதாக எனக்கு உறுதி அளித்துள்ளனர்.

ஜனாதிபதியின் பிரதம செயலாளர் சமன் இது பற்றி பொறுப்பில் உள்ள சகலருக்கும் அறிவிப்பதாக எனக்கு உறுதி அளித்துள்ளார்.

பொலிஸுக்கு அல்ல, எந்த ஒரு அரசு நிறுவனத்துக்கும், தனிப்பட்ட வீட்டுத் தகவல்களைக் கொடுக்க நாம் விரும்பமாட்டோம். கொடுத்தால் அது எங்கெங்கு போகும் என எனக்குத் தெரியும்.

மேலும் இது ஒரு பொலிஸ் ராஜ்யம் அல்ல. பொலிஸ் சட்டத்தில் பதிவு செய்ய இடம் இருக்கின்றது. அது எனக்குத் தெரியும். ஆனால், அதை விசேட அவசர காலங்களிலேயே பயன்படுத்த வேண்டும். எங்காவது சட்டத்தை மீறுபவர்கள் இருப்பார்கள் எனில் அவர்களை அடையாளம் கண்டு கைது செய்யுங்கள்; விசாரியுங்கள். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், பொதுவாக வீடு வீடாகப் போக வேண்டாம். இன்று போர் நடைபெறுகின்ற, சட்ட விரோத ஆயுத அமைப்புகள் செயற்படுகின்ற அவசர காலங்கள் அல்ல.

போர்க் காலத்திலும் நான் இங்கே தான் இருந்துள்ளேன். அந்தக் காலத்திலேயே இதைப் பொறுத்துக் கொள்ளாதவன் நான்.

இன்று இந்த சமாதான காலத்தில் இந்தப் பொலிஸ் படிவங்களை வீடு வீடாகக் கொண்டு சென்று பதிவு செய்வதா? உடன் நிறுத்துங்கள் என்று சம்பந்தப்பட்ட அரசியல், மற்றும் நிர்வாக தரப்பினரிடம் நான் கூறியுள்ளேன்.

போராட்டக்காரர்களைக் கொழும்பில் வீடு வீடாகத் தேடுவதாக ஒரு பொலிஸ் நிலைய அதிகாரி என்னிடம் சொன்னார். அவருக்கு நான் என்ன பதில் கூறினேன் என்பதைப் பகிரங்கமாகக் கூற முடியாது.

போராட்டக்காரர்களை வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் தேட வேண்டாம் எனவும் இவருக்குக் கூறினேன். அதை எங்கே தேட வேண்டும் எனவும் கூறினேன்.

கொழும்பில் எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் இத்தகைய நடவடிக்கை தொடருமானால், அவற்றை உடன் என் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள் என்று ஊடகங்களைக் கோருகிறேன்.

நமது மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பரமேஸ்வரன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள். நாம் உடன் நடவடிக்கை எடுப்போம்.

இது பற்றி, பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர் சந்திரா பெர்னாண்டோ, கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரக்குமார, வெள்ளவத்தை பொறுப்பதிகாரி பிரசாந்த சில்வா, பம்பலப்பிட்டி பொறுப்பதிகாரி பத்மலால் ஆகியோருக்கும் அறிவித்துள்ளேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 200 கிலோ.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள் இந்தியக் கடற் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்திய எல்லையூடாகச் சந்தேகத்துக்கிடமாக ஒரு விசைப்படகு பயணித்த வேளை இந்தியக் கடற் படையினர் அந்தப் படகைச் சோதனை செய்தனர். இதேபோதே இந்த 200 கிலோகிராம் ஹெரோயின் கைப் பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் கேரள மாநிலம் கொச்சினை அண்டிய பகுதியிலேயே ஹெரோயின் சிக்கியுள்ளது.

இதை உடைமையில் வைத்திருந்த 6 ஈரானியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜெனிவாவில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப் பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இதற்கு முன்னர் எமது நாட்டுக்கு எதிராகத் தீர்மானம் வந்தபோது 11 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன. ஆனால், இம்முறை அது 7 ஆகக் குறைவடைந்துள்ளது.

கடந்த காலங்களில் எமக்கு ஆதரவாக இருந்த நாடுகளும் நடுநிலை வகித்திருக்கின்றமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டுக்கு ஏற்பட்ட தோல்வி மட்டுமல்ல அவமானமும் ஆகும்.

அதுமட்டுமன்றி இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் மூலம் எமக்குச் சாதகமான பதில் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வாறான எந்தச் சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

மேலும், ஜெனிவாவில் எமது நாட்டுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டு முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டதாகும்.

எமது நடவடிக்கை காரணமாகவே நாங்கள் தேவையில்லாத பிரச்சினைக்குள் சிக்கி இருக்கின்றோம்.

புனர்வாழ்வுச் சட்டமூலம் பயங்கரவாதத் தடைச் சட்டம், இனவாதச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் எமது நாட்டுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகவுள்ளன - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2022இல் வெளியிடப்பெற்றது.